செ.வெ.எண் : 622 நாள் : 01.08.2008

பத்திரிகைச் செய்தி

## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகம் அடங்கிய அஞ்சல் அட்டை வெளியிடுதல்.

பெருகிவரும் வாகன எண்ணிக்கையை கருத்தில் கொண்டு சாலை போக்குவரத்தினை மேம்படுத்தவும், சாலை பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றவும் தமிழக அரசு சாலை பாதுகாப்பு நிதி ஒன்றினை உருவாக்கி ஆண்டுதோறும் நிதிஒதுக்கீடு செய்து சாலை சீரமைப்பு, சாலை வசதிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விபத்தில் காயமடைந்த நபர்களின் உயிரினை காக்க அவசர சிகிச்சை மையங்கள் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை செயல்படுத்தி வருகிறது.

சாலை பாதுகாப்பினை மேம்படுத்தும் நோக்கிலும், வாகன விபத்துக்களை குறைத்து உயிர் இழப்புகளை தடுக்கும் நோக்கிலும் கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழக அரசு நாட்டிலேயே முதல் முறையாக சாலை பாதுகாப்புக் கொள்கை ஒன்றினை ஏற்படுத்தி அதனை செயல்படுத்தி வருகிறது. விபத்துக்களை குறைக்கவும், உயிர் இழப்பு ஏற்படுத்திய விபத்துக்களை குறைக்கும் நோக்குடனும் பல்வேறு சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு அரசு ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பு நிதியாண்டில் மேற்கூறிய தொகையானது ரூ. 16.80 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு

சாலை விதிகளை கடைப்பிடித்தல் மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் நோக்கத்தோடு பல்வேறு விழிப்புணர்வு பணிகள் செயல்படுத்தப்பட்டுவருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சனவரித் திங்கள் முதல் வாரத்தில் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு அளிக்கும் பொருட்டு சாலை பாதுகாப்பு வார விழா நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர கடந்த ஆண்டு சாலைவிழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளுக்காக ரூ 65.48 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பரவலாக அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில், அனைத்து தரப்பு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள அஞ்சல் அட்டையில் சாலை பாதுகாப்பு வாசகங்கள் அஞ்சல் துறை மூலம் 5 லட்சம் அஞ்சல் அட்டைகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலுள்ள அஞ்சல் அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட தயார் நிலையில் உள்ளது. பெரும்பாலான பொது மக்கள் அஞ்சல் அட்டைகளை பயன்படுத்துவதால் அஞ்சல் அட்டை மூலம் தற்போது செயல்படுத்தவிருக்கும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முயற்சி பொதுமக்களிடம் எளிதில் சென்றடைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சாலை பாதுகாப்பு குறித்த சிறப்பு நடவடிக்கைகள்

### 1. பல்வேறு துறை அலுவலர்களை கொண்ட குழுக்கள்

பல்வேறு துறை அலுவலர்களை கொண்ட குழுக்கள் அமைத்து அதன் மூலம் விபத்துகளை, விபத்து நடந்த இடங்களை ஆராய்ந்து உயிரிழப்பு ஏற்படுத்தும் விபத்துகள் நடைபெறா வண்ணம் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அரசு ஆணை எண்1420 உள்(போ.வ)துறை நாள் 10.10.07 ல் பிறப்பித்து பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து காவல், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் உள்ளடக்கி அமைத்துள்ளது. இக்குழு விபத்து நடைபெறும் இடங்களை பல்வேறு கோணங்களில் கூர்ந்து ஆய்வு செய்து அதன் மூலம் விபத்துக்களின் காரண காரியங்களை தீர ஆராய்ந்து அதற்கான மூலகாரணத்தை கண்டறிந்து மிகச்சரியான பரிந்துரைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி மேற்கண்ட ஆய்வுகள் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவினரால் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2. கணினி மூலம் பழகுனர் ஓட்டுனர் உரிமம் வழங்குதல்

ஓட்டுனர்களின் கவனக்குறைவால் விபத்து ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்தோடு, பழகுனர் ஓட்டுனர் உரிமம் வழங்கும்போது ஓட்டுனர்களின் திறன் சோதனை கணினி மூலம் தேர்வுசெய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இம்முறை தற்போது 25 அலுவலங்களின் பின்பற்றப்படுகிறது. இவை அனைத்து அலுவலங்களிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3. சாலைசந்திப்புகளில் விபத்து நடைபெறாவண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

2008–09 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சமர்பித்தபோது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க அரசு 1283 கிராமப்புற / நகராட்சி சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளுடன் இணையும் சந்திப்புகளை கண்டறிந்து அவற்றிற்கு வேகத்தடை, எச்சரிக்கை பலகைகள் மற்றும் மின் விளக்கு வசதிகள் அமைக்க அரசாணை 738 உள்(போ.வ)துறை நாள் 30.06.2008ல் ரூ. 12.80 கோடி நிதி ஒக்கீடு செய்து. மேம்பாட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### 4. ஓட்டுநர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி

சாலை விபத்துக்களை ஆய்வு செய்து அளித்த புள்ளி விவரங்களை 96 சதவிகித விபத்துகள் ஓட்டுநர்களின் தவறுகளால் நடைபெற்றுள்ளது என தெரிவித்துள்ளது. எனவே கனரக வாகன ஓட்டுநர்களுக்கு ஒரு நாள் சிறப்பு பயிற்சி அளிக்க அரசு ஆணை எண் 604 நாள் 26.5.2008-ல் அரசு ஆணையிட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்கும் / மேற்குறிப்பு செய்யும் போது மேற்கூறிய ஒரு நாள் சிறப்பு பயிற்சி சான்றினை கட்டாயமாக சமர்ப்பிக்கபட வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு 1.10.2008 முதல் அமுலுக்கு வருகிறது.

Road Safety is Life Safety

50

Speed Limit

GOVERNMENT OF TAMIL NADU
TRANSPORT DEPARTMENT
தமிழக அரசு – போக்குவரத்துத் துறை

**SAFETY IS MORE IMPORTANT THAN SPEED**

**Transport Commissioner/**
**Road Safety Commissioner**

मेघदूत पोस्ट कार्ड
MEGHDOOT POST CARD



पिन PIN

Do not write or print below this line

---

Road Safety is Life Safety

Give Way

GOVERNMENT OF TAMIL NADU
TRANSPORT DEPARTMENT
தமிழக அரசு – போக்குவரத்துத் துறை

OVERTAKE ONLY AFTER GETTING SIGNAL

**Transport Commissioner/**
**Road Safety Commissioner**

मेघदूत पोस्ट कार्ड
MEGHDOOT POST CARD



पिन PIN

Do not write or print below this line